தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 6.
ந.க.எண் 94433/ஐ/இ2/2011 நாள் 28 .09.2011.

பொருள் சமச்சீர் கல்வி – பத்தாம் வகுப்பு அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்வுகள் நடைமுறைப்படுத்துதல் – கால அட்டவணை அனுப்புதல் சார்ந்து.

பார்வை இவ்வலுவலக இதே செயல்முறை ந.க.எண் 94433/ஐ/இ2/2011 நாள் 21.09.2011.

--------

பார்வையில் கண்ட செயல்முறைகளின்படி தமிழ்நாட்டில் 2011–12–ம் கல்வியாண்டில் அனைத்து வழி பள்ளிகளிலும் சமச்சீர் கல்வி முறை நடைமுறைப்படுத்தப்பட்டு , பத்தாம் வகுப்பு அறிவியல் பாடத்தில் செய்முறைத் தேர்வுகள் நடைமுறைப்படுத்துவது சார்ந்த அரசு ஆணை தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது.

மேலும் 2011–2012 ஆம் கல்வி ஆண்டில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு செய்முறை வகுப்புகள் நடத்தி ஆண்டு இறுதி பொதுத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார்படுத்த கீழ்க்காணும் அட்டவணையைப் பின்பற்றி பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சிகளை நடத்துமாறு அனைத்து அரசு/அரசு உதவி பெறும்/மெட்ரிக்/ஆங்கிலோ இந்தியன் மற்றும் ஓரியண்டல் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து ஆய்வு அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. இப்பொருள் சார்ந்து தனிக் கவனம் செலுத்தி கண்காணிக்குமாறு சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

<u>செய்முறைப் பயிற்சி கால அட்டவணை</u>

| Sl.No | Month | Experiment Number<br>பரிசோதனை எண் | | | |
|---|---|---|---|---|---|
| | | Zoology<br>விலங்கியல் | Botany<br>தாவரவியல் | Chemistry<br>வேதியியல் | Physics<br>இயற்பியல் |
| 1 | September & October 2011 | 1 | 5 | 9 | 13 |
| 2 | November 2011 | 2 | 6 | 10 | 14 |
| 3 | December 2011 | 3 | 7 | 11 | 15 |
| 4 | January 2012 | 4 | 8 | 12 | 16 |

இதே போன்று ஒன்பதாம் வகுப்பு அறிவியல் பாடத்தில் செய்முறைப் பயிற்சிகள் அனைத்தும் பிப்ரவரி 2012க்குள் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்.)ப.மணி,
பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள்
நகல்
இயக்குநர், மெட்ரிக் பள்ளி இயக்ககம், சென்னை 6 அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.